# <u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

<u>**OS.No.**40/2013</u>

**Date:**15.09.2021 **DW.1**(ஏகப்பன்)

<u>**வாதி தரப்பு கு.வி:**</u>

1-ம் பிரதிவாதி சிங்காரம் செட்டியார் என் தகப்பனார். கண்ணாத்தாள் ஆச்சி என் தாயார். வாதி சந்திரன் என் உடன் பிறந்த தம்பி. 3-ம் பிரதிவாதி ஜெயசித்ரா என மனைவி. நானும், என் தகப்பனாரும், என் தம்பியும் பொதுக் குடும்பச் சொத்துக்கள் சம்மந்தமாக இதுவரை பிரித்துக் கொள்ளவில்லை. அவற்றை நாங்கள் பொதுவாகத் தான் அனுபவித்து வருகின்றோம். என் தகப்பனார் 1-ம் பிரதிவாதி அவரின் திருமணத்திற்கு முன்பே மலேசியாவிற்குச் சென்று சம்பாதித்தார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் 4 பாஸ்போர்ட்களும் என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதியான பாஸ்போர்ட்களாகும். அந்த 4 பாஸ்போர்ட்களின் வரிசை முறையே வா.சா.ஆ.30 முதல் 33-ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.30 முதல் 33-வரையிலான பாஸ்போர்ட்களில் என் தகப்பனாரின் தொழில் என்னும் இடத்தில் மணிலென்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 3 வங்கி பாஸ்புத்தகங்களும் என் தகப்பனாரின் வங்கி பாஸ்புத்தகங்கள். அந்த 3 வங்கி பாஸ்புத்தகங்களின் வரிசை முறையே வா.சா.ஆ.34 முதல் 36-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வங்கி ஆவணங்கள் என் தகப்பனார் 1-ம் பிரதிவாதி மலேசியாவிலிருந்து இந்தியாவிற்கு வங்கி மூலம் அனுப்பிய பணங்கள் சம்மந்தப்பட்ட 26 ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த வங்கி மூலம் அனுப்பிய பணங்கள் சம்மந்தப்பட்ட 26 ஆவணங்கள் முறையே வா.சா.ஆ.37 முதல் 62-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 7 வங்கி பாஸ்புத்தகங்கள் என்

தாயாரினுடையது என்றால் சரிதான். மேற்படி 7 வங்கி பாஸ்புத்தகங்கள் முறையே வா.சா.ஆ.63 முதல் 69-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் எனது தாயார் பெயருக்கு மலேசியா நாட்டிலிருந்து வங்கி மூலம் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட தொகைகள் சம்மந்தமான 13 ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த 13 ஆவணங்கள் முறையே வா.சா.ஆ.70 முதல் 82-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 2 ஆவணங்கள் மலேசியாவிலுள்ள சார்டேட் பேங்கிலிருந்து என் அப்பா பெயரில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட பணம் சம்மந்தமான ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த 2 ஆவணங்கள் முறையே வா.சா.ஆ.83 மற்றும் 84-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 3 வங்கி பாஸ்புத்தகங்களும் என் பெயருக்குடையது தான். அந்த 3 வங்கி பாஸ்புத்தகங்களின் வரிசை முறையே வா.சா.ஆ.85 முதல் 87-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் வங்கி ஆவணங்கள் மலேசியா நாட்டிலிருந்து என் பெயருக்கு இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட பணங்கள் குறித்த வங்கி 24 ஆவணங்கள் என்றால் சரிதான். ஆனால் அது பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது. மேற்படி என் பெயருக்கு இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட பணங்கள் குறித்த வங்கி 24 ஆவணங்கள் வரிசை முறையே வா.சா.ஆ.88 முதல் 111-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 3 ஆவணங்களும் கண்ணாத்தாள் ஸ்டீல்ஸ் பெயருக்குள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் 3 பேங்க் ஸ்டேட்மெண்டுகள் என்றால் சரிதான். அந்த கண்ணாத்தாள் ஸ்டீல்ஸ் பெயருக்குள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் 3 பேங்க் ஸ்டேட்மெண்டுகள் முறையே வா.சா.ஆ.112 முதல் 114-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தகப்பனார் பெயரில் தாவா பி செட்டியூல் 1-வது

இலக்கச் சொத்தில் என் தகப்பனார் பெயரில் தொலைபேசி இணைப்பு இருந்தது என்பதைக் காட்டக்கூடிய தொலைபேசி பில் ஆகும். அந்த தொலைபேசி பில் வா.சா.ஆ.115-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் 3 ஆவணங்களும் நான் என் கைப்பட எழுதிய ஆவணங்கள் தான். மேற்படி 3 ஆவணங்கள் வரிசை முறையே வா.சா.ஆ.116 முதல் 118-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வாரிசு உரிமைச் சான்றிதழ் என் தாயாருக்கு நானும், வாதியும் என் தகப்பனார் 1-ம் பிரதிவாதியான சிங்காரம் செட்டியாரும் வாரிசுகள் என்று காட்டக்கூடிய வாரிசுச் சான்றிதழ் என்றால் சரிதான். அந்த வாரிசுச் சான்றிதழ் வா.சா.ஆ.119-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)